# விலங்கு நண்பர்கள்:

# ராட்சதக் கரடி



## ராட்சதக் கரடி பற்றிக் அறிந்துகொள்வோம்:

1. ராட்சதக் கரடி என்பது எட்டு வகைக் கரடி இனங்களில் ஒன்று. மற்ற கரடிகளைப் போலில்லாமல் இவை மூங்கிலை மட்டுமே உணவாக உண்ணுகின்றன.

2. இவை உண்ணும் மூங்கில் சரியாக செரிப்பதில்லை என்பதால் இவை நாளொன்றுக்கு 40 முறை மலம் கழிக்கின்றன. இவற்றின் எச்சத்தில் பெரும்பாலும் செரிமானமாகாத மூங்கில் இருக்கும்.

3. மூங்கிலைப் பிடித்துக்கொள்ளும் வகையில் இவற்றின் கைகளில் இருக்கும் பெரிய அளவிலான மணிக்கட்டு கட்டைவிரலைப் போல இருக்கும்.

4. இந்த ராட்சதக் கரடிகள் சுலபமாக மரங்களில் ஏறி இறங்கும் ஆற்றல் கொண்டவை. அது மட்டுமல்லாமல் நீரிலும் நீந்தக் கூடிய ஆற்றல் கொண்டவை.

5. காய் காய் மற்றும் ஜியா ஜியா என்ற இரண்டு ராட்சதக் கரடிகளுக்கும் ரிவர் சஃபாரி தான் வீடாக இருக்கிறது. காய் காயின் தலையில் வெங்காயத்தின் மேலே இருக்கும் வேர்களைப் போல சின்னஞ்சிறு முடிகள் இருப்பதால் இதனை ‘வெங்காயத் தலை’ என்று செல்லமாக அழைக்கப்படுகிறது. ஜியா ஜியாவின் முதுகில் குறுகலான கருப்பு வரி ஒன்று உள்ளது.

குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதற்குரியவை

# ராட்சதக் கரடியின் உடல் உறுப்புகளை உற்றுக் கவனிக்கவும்.

ராட்சதக் கரடிகள் சீனாவிலுள்ள மூங்கில் காடுகளில் வாழுகின்றன. இந்தக் கரடி வகைகள் மட்டும்தான் மூங்கிலை உணவாக உட்கொள்கின்றன.



# பார், நினை, சிந்தி கேள்விகள்

**‘பார்-நினை-சிந்தி’ என்ற உத்தியைப் பயன்படுத்தி உங்கள் குழந்தைகளுடன் ஓர் உரையாடலைத் தொடங்குங்கள். உங்கள் குழந்தைகள் தாமாகவே கேள்விகளை உருவாக்கச் செய்யுங்கள்!**

*Adapted from Project Zero, Harvard Graduate School of Education



## பார்:

- கரடியின் எந்தப் பகுதி கருப்பாக உள்ளது? கரடியின் எந்தப் பகுதி வெள்ளையாக உள்ளது?
- கரடியின் வீட்டில் நீ காணும் பொருட்களைக் கூறுக.
- ...நான் பார்க்கிறேன்.

## நினை:

- இந்தக் கரடி என்ன செய்கிறது என்று நீ நினைக்கிறாய்?
- இந்தக் கரடி குளத்தை நோக்கிச் செல்லவேண்டுமென்றால், நீ அதனை எந்தத் திசையில் செல்லச் சொல்வாய்?
- ...நான் நினைக்கிறேன்.

## சிந்தி:

- இந்தக் கரடியால் மரங்களில் ஏறமுடியுமா என நான் சிந்திக்கிறேன்.
- ...என்ன என நான் சிந்திக்கின்றேன்.
- ...எங்கே என நான் சிந்திக்கின்றேன்.

# நடவடிக்கை 1:
# கரடி சுவரொட்டி



குழு / தனிநபர் நடவடிக்கை

தாள், பென்சில் மற்றும் மறுசுழற்சிக்கான பொருட்கள்

படி 1. காய் காய் பற்றிய காணொளியைக் காணுதல்.

படி 2. காய் காய் செய்யும் ஏதேனும் ஒரு செயலைச் சித்தரிக்கும்படி ஒரு சுவரொட்டி வரைக. (எ-டு. சாப்பிடுவது, உறங்குவது, ஏறுவது).

படி 3. நீ வரைந்துள்ள சுவரொட்டியில் காய் காயின் உடல் உறுப்புகளைச் சுட்டிக்காட்டி எழுதுக.

கூடுதல் சவால்: முப்பரிமாண காய் காய் ஒன்றை உருவாக்குக.

Mandai River Wonders

# நடவடிக்கை 2:



குழு / தனிநபர் நடவடிக்கை

சிங்கப்பூரைப் பிரதிபலிக்கும் படம் அல்லது ஒரு பொருள்

படி 1. காய் காய் மற்றும் ஜியா ஜியா என்னும் ராட்சத கரடிகளைச் சித்திரிக்கும் எங்கள் மின்னொலிப் புத்தகத்தை உங்கள் பிள்ளைகளுடன் கேட்டு மகிழுங்கள்.

படி 2. காய் காய் மற்றும் ஜியா ஜியா இருவருக்கும் சிங்கப்பூரைப் பற்றிய ஒரு படம் அல்லது ஒரு பொருளை அறிமுகம் செய்யும் நோக்கத்தோடு உன் வீட்டிலுள்ள ஒரு படத்தையோ அல்லது ஒரு பொருளையோ தேர்ந்தெடுக்கவும்.

படி 3. காட்டிப் பேசுதல் நடவடிக்கை ஒன்றைத் தயார் செய்க. நீ தேர்ந்தெடுத்த படம் அல்லது பொருளைக் கொண்டு கரடிகளிடமும் உன் குடும்பத்தாரிடமும் சிங்கப்பூரைப் பற்றிப் பகிர்ந்துகொள்.